பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 30 உ. செவ்வாய்க்கிழமை (12-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 77

# வவுனியா பகுதியில் தொடர்ந்து மோதல்!

## படையினரிடம் பலர் சிக்கினர்?

வவுனியாப் பகுதியில் படையினர் நடத்திய ஆட்லறி ஷெல் தாக்குதலில் பொதுமக்களுக்கு பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது.

தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினரும், வவுனியா நகரில் உள்ள படையினரும் குடிமனைகளை நோக்கி இடைவிடாது ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக் குறித்து உர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்காவிடினும் பல பொதுமக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு பேரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

வவுனியாவில் தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாகக் கடும் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதல்களில் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டதாக அறியவருகிறது. வவுனியா சண்டையில் இரண்டு இராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர் என்பதை பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் ஒப்புக் கொண்டன.

கடும் விமானத் தாக்குதல்களுடன் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா படைகள் வவுனியா பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பித்தது தெரிந்ததே.

நேற்று இச்செய்தி எழுதப்படும் வரை வவுனியாப் பகுதியில் இரண்டாவது நாளாகக் கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளே தமிழரின் பிரதிநிதிகள்; அவர்களுடன் பேச்சு நடத்துங்கள்!

## அரசுக்குத் தொண்டா ஆலோசனை

கொழும்பு, பெப். 12

தமிழர்களின் பிரதிநிதிகள் புலிகள். அவர்களுடன் அரசியல் ரீதியில் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணுவதையே அரசு நோக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

—அமைச்சர் தொண்டமான் இவ்வாறு கூறியுள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழர் அமைப்புக்களுடன் எத்தனை மாநாடுகள் நடத்தினாலும் சரி, எத்தனை தடவைகள் அனைத்துக்கட்சி மாநாட்டை நடத்தினாலும் சரி அவற்றின் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்ய முடியாது.

### புலிகளுடன் பேசவேண்டும்

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அரசியல் ரீதியில் பேச்சுக்கள் நடத்தி பிரச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கம்:

# ஈராக்கில் உதவி; ஈழத்தில் இல்லையா?

## அதிகாரிகளிடம் நேரில் கேள்வி

யாழ்ப்பாணம், பெப். 12

ஈராக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உணவு மற்றும் மருந்துகளை வழங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, ஈழத் தமிழ் மக்களுக்கு ஏன் அப்படி வழங்கக் கூடாது?

—யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற உயரதிகாரிகள் கூட்டம் ஒன்றில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் இவ்வாறு கேள்வி எழுப்பப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# காமினி மீண்டும் புறப்பாடு

கொழும்பு, பெப். 12

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா மீண்டும் லண்டன் பயணமானார்.

அவர் மேற்படிப்புக்காக லண்டன் செல்வதாகவும்—

அவர் அங்கு சில மாதங்கள் தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# கொழும்பு நோக்கி வந்த அமெரிக்கக் கப்பலில் தீ!

புதுடில்லி, பெப். 12

கொச்சித்துறைமுகத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட அமெரிக்கக்கப்பல் ஒன்றின் என்ஜின் அறையில் ஏற்பட்ட தீ காரணமாக ஒரு மாலுமி உயிரிழந்தார். இன்னும் பலர் காயமடைந்தனர்.

இக் கப்பல், இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தும் ஒன்றா என்பது தெரியவில்லை என கூறப்பட்டது.

# யாழ். ஆஸ்பத்திரிக்குரிய டீசல் வரவில்லை!

யாழ்ப்பாணம், பெப். 12

நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமண கப்பலில் யாழ் ஆஸ்பத்திரிக்கான டீசல் எடுத்து வரப்படவில்லை எனத்தெரிய வருகிறது.

கொழும்பிலிருந்து கப்பல் புறப்படுவதற்கு முன்பாக டீசல் பரல்களை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்க காதார அமைச்சு அதிகாரிகள் தவறிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

டீசல், மற்றும் இன்ஜின் ஒயில் எடுத்து வரப்படாததால் ஆஸ்பத்திரிக்கான மின் விநியோகம் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (உ-5)

## முச்சந்தி முரளி



அப்பா...... காமினியார் திரும்ப ... புறப் பட்டிட்டார் போலை......!

# 5 புலிகள் வீரமரணம்

வவுனியா பரனாட்டான்கல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஐவர் வீர மரணமடைந்தனர்.

வரதன் (சத்தியசீலன்-புளியங்குளம்), ஜனா (விஜயகுமார் - முத்தையன்கட்டு), கருணா (பிரேம்குமார்-சேமமடு), மகான் (விஜயசுந்தரம்-பதுளை), பிரேமன் (உதயகுமாரன்- சின்னத்தம்பனை) ஆகிய ஐந்து போராளிகளுமே வீரமரணமடைந்தவர்களாவர். (உ)

# பரந்த அளவில் விமானத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 12

வவுனியா நகரை அண்டிய பகுதியில் நேற்று முன்தினம் முதல் பெருத்த எடுப்பில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இப்பகுதியில் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.

வவுனியா விமானப் படை முகாம் ஓடுபாதையில் இருந்து மாறி மாறிப் புறப்படும் பொம்மர்கள் அயலில் உள்ள இடங்களில் குண்டுகளை வீசுவதும், மீண்டும் வந்து தரையிறங்கி குண்டுகளை ஏற்றிக் கொண்டு செல்வதுமாக இருந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இப்போதைக்கு அமைதி திரும்ப வாய்ப்பில்லை!

## அன்ரன் பாலசிங்கம் பேட்டி

லண்டன், பெப். 12

இப்போதைக்கு தமிழர் தாயகத்தில் அமைதி ஏற்படக் கூடிய வாய்ப்பில்லை.

— இப்படிக் கூறுகிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கிறார்:

"நாம் முன்வைத்த போர் நிறுத்த யோசனையை அரசு நிராகரித்துவிட்டது. இந்த நிலையில் அரசு மேலும் தாக்குதல்களை தொடுத்தால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து சண்டை நடக்கும்"-என்றார் அவர். (உ-3)

# தாண்டியடிப் பகுதியில் ஐம்பது தமிழர் கைது

நேற்று முன்தினம் அதிகாலையில் அம்பாறை மாவட்டம் தாண்டியடி முகாமில் இருந்து வந்த விசேட அதிரடிப் படையினர் சின்னத் தோட்டம் என்ற பகுதியைச் சுற்றிவளைத்து சுமார் ஐம்பது அப்பாவித் தமிழர்களைக் கைது செய்தனர்.

தாண்டியடி முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகக் கூறப்படும் இந்த ஐம்பது பேருக்கும் பின்னர் என்ன நடந்தது என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை கடந்த 4 ஆம் திகதி தாண்டியடி விசேட அதிரடிப் படையினர் சிவா என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ஓய்வூதியம் வழங்க 1 கோடி ரூபா ஒதுக்கீடு!

ஓய்வூதியம் வழங்குவதற்காக யாழ்-மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளுக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கிக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பணத்திலேயே இந்தப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

கப்பலில் வந்த பணத்தின் ஒரு பகுதி திணைக்களங்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது. (உ-3)

# குச்சவெளியில் நிலக்கண்ணி; கான்ஸ்டபிள், சிப்பாய் பலி!

கொழும்பு, பெப். 12

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளியில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி ஒரு பொலீஸ்காரரும் ஒரு சிப்பாயும் உயிரிழந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கேர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள சிறீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். (விக்னா ரியூஷன் சென்ரர் அருகாமை) (15783)

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோணியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாகப் பெற்றுக்கொள்ள கிளின்கட் 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (14608)

### ரைப்பிங் வகுப்புகள்

தமிழ்-ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கப்படும். Fudo: 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். இணை: பிரதானவீதி, மாவிட்டபுரம். (C/745)

### ஜோதிடம்

"சனி மாற்றம்" என்னும் இடைக்கும், யுத்தச் செவ்வாயினதும், சனி, ராகு, கேது, வியாழனின் நேர்க்கோட்டினதும் கெட்ட சஞ்சாரங்கள் வளைகுடாப் போரை மோசமடையச் செய்து உலகில் பொருளாதார அழிவுகளை உண்டாக்கும்: Prof: சத்தியதாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி. (15890)

### தரன் ஸ்ருடியோ

நபர் சீசீ, கலர் - கறுப்பு - வெள்ளை பாஸ்போர்ட், அடையாள அட்டை, 12"X10" படங்கள், பிளாஸ்ரிக், விளம்பரபோட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ். வீதி. (றெட்னா வீதி) யாழ்ப்பாணம். (15710)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள்; "சக்தி சரவணா" 810, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15799)

## டெலிவரி சைக்கிள்

பொதிகளை எடுத்துச் செல்லக் கூடிய முன் கரியர் (Front Carrier) உள்ள விநியோகச் சைக்கிள் (Delivery Cycle) தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

உதயன் பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ். மாவட்ட
கமநலச்சேவை திணைக்களத்தினாலும்,
கமத்தொழில் திணைக்களத்தினாலும்,
நடத்தப்படுகின்ற

## வீட்டுத்தோட்டப் போட்டி-1991

நீங்களும் பங்குபற்றுங்கள்
"உற்பத்தியைப் பெருக்குங்கள்"
பரிசினைப் பெறுங்கள்.

வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவித்து உணவுத் தேவையில் தன்னிறைவு அடையும் நோக்கத்துடன் கமநலசேவை நிலையங்களின் மட்டத்திலும், யாழ். மாவட்ட மட்டத்திலும் வீட்டுத் தோட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிப் பதிவுக்கான இறுதித் திகதி
28 - 01 - 991

பரிசில்கள்:

ஒவ்வொரு கமநல சேவை நிலைய மட்டத்தில்

1ஆவது பரிசு: 1000 ரூபாய்
2ஆவது பரிசு: 750 ரூபாய்
3ஆவது பரிசு: 500 ரூபாய்

மாவட்ட ரீதியான பரிசில்கள்:

1ஆவது பரிசு ரூபா 3000/-
2ஆவது பரிசு ரூபா 2000/-
3ஆவது பரிசு ரூபா 1000/-

மேலதிக விபரங்களை உங்கள் பகுதி கமநல சேவை நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சிரேஷ்ட உதவி ஆணையாளர்,
கமநல சேவைகள் திணைக்களம்,
யாழ். மாவட்டம்.

[சி-5752]

## பதவி வெற்றிடம்

### (செயலாளர் பதவி)

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மாவட்டச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள்

I. முகாமைத்துவம்
அல்லது
II. வர்த்தக பட்டதாரிகள்

ஆகியோரிடம் இருந்து கோரப்படுகின்றன. சங்க அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 28 - 01 - 1991

தலைவர்,
யாழ். மா. சி.க.கூ. சங்க சமாசம்,
182 1/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5753)


## விண்ணுலக வாழ்வின் ஓராண்டு பூர்த்தி

தூல முகிழ்ப்பு:
28 - 01 - 1908

தூல அவிழ்ப்பு:
24 - 01 - 1990

திதி:
12 - 02 - 1991



அமரர்
### அருணாசலம் செல்லையாபிள்ளை
(முன்னாள் இரத்தினபுரி பிரபல வர்த்தகர்)

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய் அறிவுச்சுடராய் அன்றேர் சபையில் தலைமை தாங்கி ஆலவிருட்சம்போல் நின்று எம்மைக்காத்த தெய்வமே; ஆண்டு ஒன்றாகிலும் இன்னமும் நம்பமறுக்கும் எமது இதயங்களில் நிலைத்திருந்து வழிகாட்ட வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவன் திருவருளை வேண்டி நிற்கும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

80/16, அத்தியடி லேன்,
யாழ்ப்பாணம். [15591]


## தென்னம் தோட்டம் அழிவு

முல்லைத்தீவு மாவட்டம் அளம்பில் செம்மலை, வற்றாப்பளை, முள்ளியவளை, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் தென்னந்தோட்டங்கள் பராமரிப்பு இன்றி அழிகின்றன. தோட்டங்கள் முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தாலேயே தேங்காய்கள் சிறுத்தும் விளைவுகள் குறைந்தும் வருவதாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (இ 113)

## முக்கிய அறிவித்தல்

01 - 01 - 1991 முதல் எமது ஆர். வி. ஜி. பீடிகள் வழமை போல் பல வர்ண லேபலில் விற்பனை செய்யப்படுகின்றன.

எமது அசல் ஆர். வி. ஜி. பீடிகள் வெள்ளை லேபல்களில் விற்பனையாவதில்லை என்பதை ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்

(15805)

## ஆனந்தா கலண்டர்

- மலிவு விலையில் பஞ்சாங்கக் கலண்டர் -

1991ஆம் ஆண்டுக்கு ஆனந்தா கலண்டர் நாளை புதன்கிழமை வெளிவருகிறது. தமிழ், ஆங்கிலத் திகதிகள், அரச வங்கி வர்த்தக போயா விடுமுறைகள், அமாவாசை, பூரணை, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, கார்த்திகை விரத தினங்கள் மற்றும் அட்டமி நவமி, பிறவிசேட தினங்கள் யாவும் அடங்கியது. காலத்திற்கேற்ற சிக்கனக் கலண்டர். அழகிய வண்ணப் படங்கள் கொண்ட மட்டைகளுடன் விலை ரூபா 22/- மட்டுமே. கடதாசித் தட்டுப்பாடு காரணமாக சொற்ப பிரதிகளே அச்சிடப்படுவதால் விற்பனையாளர்கள் உடனே தொடர்பு கொள்க. விற்பனைக் கழிவுண்டு.

ஆனந்தா புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (15813)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 28 - 11 - 1919



மறைவு: 13 - 01 - 1991

### அமரர் கனகர் முத்துவேலு
(உடுப்பி ஹோட்டல் முன்னாள் உரிமையாளர்)

அன்பும் பண்பும் பாசமும் கொண்டு
அனைவரதும் ஆதரவைப் பெற்ற உங்கள் வாழ்வு
என்றும் எம் நெஞ்சகலாது நிலைத்திருக்கும்!

மனைவி, மகன்மார்.

12/1 மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [15434]

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை விநாயகம்பிள்ளை

தும்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விநாயகம்பிள்ளை அவர்கள் 10-2-91இல் காலமாகிவிட்டார். இவர் தற்போதைய ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், யாழ். மத்தியகல்லூரி முன்னைநாள் ஆசிரியருமாவார். இவர் மனோரஞ்சிதத்தின் (ஆசிரியை வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) அன்புக் கணவரும், சுமங்கலா, மகேஸ்வரன் (மதுவரித் திணைக்களம்) பரமேஸ்வரன், ஜெயந்தலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-2-91 நேற்று தும்பளையில் நடைபெற்றது.

வளவாய் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்
பா. ரகுவரன்
(15436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பரந்தன் பழைய கதை!

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடிவிட்டு, அதற்குப் பதிலாக அம்பாந்தோட்டையில் புதிய தொழிற்சாலை ஒன்றை அமைப்பது குறித்துக் கைத்தொழில் அமைச்சு ஆராய்ந்து வருகிறது — இந்தச் செய்தி நேற்றைய பத்திரிகைகளில் முக்கிய இடம் பிடித்திருக்கிறது.

இதே செய்தி கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக இடைக்கிடையே தலைகாட்டுவது வழக்கமாகி விட்டது. நாடாளுமன்றத்திலும் இது குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டதும், பிரஸ்தாபிக்கப்பட்டதும் உண்டு. சிறில் மத்தியு என்பவர் கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் இருந்தே இந்த யோசனை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இந்த யோசனைக்கு தொழிற் சங்கங்கள், ஊழியர்கள் மற்றும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் அக்கறை உள்ளவர்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கடந்த ஆறு வருடங்களாக இயங்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்த அசமந்தத்துக்கும், அக்கறை இன்மைக்கும் அரசாங்கம் தான் பொறுப்பு. அங்கு பணிபுரியும் ஊழியர்களோ, பரந்தன் பகுதியில் வாழும் மக்களோ காரணர்கள் அல்லர்.

பாதுகாப்பு நிலைமை சீரில்லாத காரணத்தைக் காட்டி மூடப்பட்ட தொழிற்சாலை, பாதுகாப்பு நிலைமை சீரான வேளைகளிற் கூட இயக்கப்படவில்லை. இயந்திரத்தின் பழைமை, தொழிற்சாலையைப் புதுப்பிக்க நிதி வளம் போதாமை என்ற காரணங்களைக் காட்டி வேண்டுமென்றே பரந்தன் தொழிற்சாலை இயங்குவதற்கு அரசு முட்டுக்கட்டை போட்டு வந்தது, வருகிறது.

தமிழ்ப் பகுதியில் உள்ள தொழிற்சாலையை மூடிவிட வேண்டும் என்ற கபட நோக்கத்தை அடி மனதில் வைத்துக் கொண்டு செயற்படுவதால், அரசு தொழிற்சாலையை மீள இயக்கச் செய்வதில் தாமதம் காட்டி வருகிறது என்பதே உண்மை.

வடக்கு - கிழக்கில் உள்ள பெரும் தொழிற்சாலைகள் மூன்று. வடக்கில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும், கிழக்கில் காகிதத் தொழிற்சாலை.

வடக்கு - கிழக்கில் கைத்தொழில் வளர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது என்ற பெரும் சூழ்ச்சியின் ஒரு பகுதியே பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விவகாரம். அதனைச் சுற்றி வளைத்து, நெளிந்து சுழித்துச் சொல்வது அர்த்தமற்றது. பரந்தன் பழைய கதை காலத்துக்குக் காலம் உயிர்ப்பிக்கப்படுவதன் பின்னணியும் அதுவே.

ஒரு தொழிற்சாலை தமிழ்ப் பகுதியில் இயங்கச் சகிக்காத அரசு, தமிழர்களுக்கு அதிகாரப் பரவலும், தன்னுரிமையும், தன்னாட்சியும் தானாகத் தரும் என்று எங்ஙனம் எதிர்பார்ப்பது? அதைவிட மடத்தனம் வேறு ஏது இருக்கும்?

# யு. எஸ். உதவித் திட்டத்தின்கீழ் 15,000 விவசாயிகள் தெரிவு

## விதைகள், பசளை, மண்ணெண்ணெய் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். குடாநாட்டில் பாரிய விவசாயத் திட்டம் யு. எஸ். உதவித் திட்டத்தின் கீழ் இம் மாதம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டம் ஜூன் மாதம் வரை அமுல் செய்யப்படும். 15 ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் நன்மை அடைவார்கள்.

கெயர் இன்ரர்நஷனல் அமைப்பின் மேற்பார்வையில் யாழ். செயலகமும், ஐந்து அரச சார்பற்ற நிறுவனங்களும், சமநல விவசாயத் திணைக்களமும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கின்றன.

உப - உணவுச் செய்கை 75 சத வீதமும், நெல் செய்கை 25 வீதமும் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த திட்டத்தில் தெரிவாகும் விவசாயிகளுக்கு விதைகளும், பசளை, மண்ணெண்ணெய் விவசாய உபகரணங்கள் ஆகியனவும் வழங்கப்படும்.

காற்று அமைப்பு மூலம் 1500 விவசாயிகளும், அகதிகள் புனர்வாழ்வு மூலம் 8 ஆயிரம் விவசாயிகளும், உலர்வலய அபிவிருத்தி நிறுவனம் மூலம் 3 ஆயிரம் விவசாயிகளும், சேப்பாய் அபிவிருத்தி அமைப்பு மூலம் 1500 விவசாயிகளும், மாவட்ட கிராம உதவிச் சங்கம் மூலம் 7 ஆயிரம் விவசாயிகளும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

பச்சிலைப்பள்ளி பகுதியிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. (இ-1)

## சித்திரம் வரைதல் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 12

வட்டுக்கோட்டை லயன்ஸ் சமகம் பாடசாலை மாணவருக்கான சித்திரம் வரைதல் போட்டி ஒன்றை எதிர்வரும் 16ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடத்துகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் லயன். டாக்டர் போட்டர் இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். (இ)

## ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், பெப். 12

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 156 ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள ராமகிருஷ்ணாலயத்தில் இடம் பெறும். விசேஷ நிகழ்ச்சியாக இசை அரங்கமும் இடம் பெறும்.

## மீண்டும் வேலை

தாளையடி, பெப். 12

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட மாவில் மோசடி செய்தனர் என்று கருதப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்ட மூன்று கூட்டுறவு ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது. (இ-44)

## ஓய்வூதியரின் கஷ்டங்களை நீக்கக்கோரி மகஜர்

யாழ்ப்பாணம், பெப். 12

ஓய்வூதியர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெறுவதில் இருந்து வரும் தாமதம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

ஓய்வூதியம் பெறுவோர், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கோரி உள்ளனர்.

1990 ஜூன் மாதத்துக்குப் பின்னர் ஓய்வூதியர்கள் பெரும் கஷ்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்றும் அக்கோபவருக்கு பின்னர் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மகஜர் நாளை 13ஆம் திகதி யாழ். அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட உள்ளது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு சகல ஓய்வூதியம் பெறுவோரையும் யாழ். செயலகத்தின் முன்பாகக் கூடும்படி கோரப்பட்டுள்ளது. (இ)

## யானைக்கு பொறி வைத்தவரே காயம்

பயிரை நாசம் செய்துவந்த யானைகளுக்கு வைத்த பொறி, தவறுதலாக வெடித்து பொறி வைத்தவரையே படுகாயப்படுத்தியது.

புதுக்குடியிருப்பு திப்பிலிக் குளத்தில் நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் சின்னத்தம்பி தம்பையா (72 வயது) என்பவரே படுகாயமுற்றார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-11)

## இஸ்ரேலுக்கு சாதகமான நிலை என சிரியா குற்றச்சாட்டு

★ இஸ்ரேல் மீது ஈராக் நடத்திவரும் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்று சிரியா அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு தார்மீக ஆதரவுடன் இராணுவ, பொருளாதார உதவிகளையும் மேற்குநாடுகள் இப்போது கூடுதலாக வழங்க முன்வந்துள்ளன என்றும் சிரியா கூறியிருக்கிறது.

குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேறாத நிலையில் வளைகுடா நெருக்கடிக்கு அமைதித்தீர்வு காணுவது என்பது நடக்க முடியாத காரியம் என்றும் சிரியா தெரிவித்துள்ளது.

## ஈரானின் நம்பிக்கை

தமது சமரச யோசனைக்கு ஈராக் அனுப்பியுள்ள பதில், அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் வாய்ப்பை முற்றாக நிராகரிக்கவில்லை என ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வேலாயதி தெரிவித்தார்.

ஸ்திரமானதும் பொறுப்புணர்ச்சியுள்ள ஒரு மத்தியஸ்த நாடாக ஈரான் இருக்கும் என்றும் அவர் சொன்னார்.

## தேர்தல் நடத்தக் கோரிக்கை

வளைகுடாப் போர் முடிந்ததுடன் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தொழிற் கட்சித் தலைவர் நீல் கின்னொக் வேண்டுகோள் விடுத்தார்.

மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## அரசியல் கட்சிகள் மாநாடு

பன்னாட்டுப் போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் வசதிகளைத் தொடர்ந்தும் இந்தியா வழங்குவதா என்பது பற்றி முடிவுசெய்ய அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டை அழைக்கப் போவதாக பிரதமர் சந்திரசேகர் அறிவித்திருக்கிறார்.

# வல்வையை வதைத்த நான்கு நாட்கள்

வல்வைப் புயல்:

பகுதி: ஒன்று

வல்வெட்டித்துறையில் வசிக்கும் மக்களுக்கு எச்சரிக்கை

வல்வை

ந. அனந்தராஜ்

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி நண்பகல் 12.40 மணி!

உச்சி வெய்யில், எழில் மிகுந்த வல்வெட்டித்துறை நகரத்தைத் தகதகவென ஒளியூட்டி அழகுபடுத்திக் கொண்டிருந்தது!

அந்த உச்சி வெய்யிலில், ஸ்ரீலங்காவின் உலங்கு வனூர்தியொன்று பேரிரைச்சலுடன் மிகவும் தாழப் பறந்த நிலையில், வல்வெட்டித்துறையைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டபடி பறந்து கொண்டிருந்தது!

"ஆ...ஹாய்...! ஹெலியில் இருந்து ஏதோ நோட்டீஸ் போடுறான்... எல்லாம் வல்வெட்டித்துறைக்குள்ளை தான் விழுகுது..."

அயல் வீட்டில் நின்ற பிள்ளைகளின் கூச்சல் காதைப் பிளந்தது!

"ஏதாவது பொய் மூட்டைகளை அல்லது அரசாங்கப் பத்திரிகைகளைப் போடுவினம்" —

என்று மனதுக்குள் எண்ணியபடி, நான் அதைப் பெரிது படுத்தாமல் இருந்தேன்.

"ஆ... வல்வெட்டித்துறை மக்கள் எல்லாரையும் வீட்டை விட்டு எழும்பிப் போகட்டுமாம்..."

தெருவில் நின்று விளையாடிக்கொண்டிருந்த எனது மகள் சிரித்தபடி கூறிக் கொண்டே எனக்கருகில் ஓடி வந்தாள்.

"என்ன!... விளையாட்டு விடுகிறியோ? ஓடிப்போய் யாரிட்டையாவது ஒரு நோட்டீஸ் வாங்கிவா பார்ப்பம்..."

விமானப்படையினர் வீசி எறிந்த அந்தத் துண்டுப் பிரசுரம் என்னவாக இருக்கும் என்ற ஆவலில், எனது மகளை அதட்டினேன். அவள் ஓடிச் சென்று, தெருவில் போய்க்கொண்டிருந்த ஒரு சிறுவனிடம் இருந்து ஸ்ரீலங்காவின் உலங்கு வனூர்தியில் இருந்து வீசி எறியப்பட்ட துண்டுப் பிரசுரத்தை வாங்கி வந்தாள்.

முத்து முத்தான எழுத்தில் கையால் எழுதப்பட்டு தோணியோ செய்யப்பட்ட அந்தத் துண்டுப்பிரசுரத்தில் —

வல்வெட்டித்துறையில் வசிக்கும் மக்கள் அனைவரும் தமது உடைமைகளை எடுத்துக் கொண்டு நாளை மாலைக்குள் துக்கிடையில் (48 மணித்தியாலம்) வல்வெட்டித்துறையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று எச்சரிக்கை செய்யப்படுகிறனர்.

துண்டுப் பிரசுரத்தில் இருந்த எச்சரிக்கையைப் பார்த்ததும் உள்ளூர என்மனம் சிறிது பதற்றம் அடைந்தது.

"என்னப்பா! .... நாங்களும் எங்கையாவது போவமோ? ...!"

வழக்கமாகவே பரபரப்படையும் என் மனைவியின் பதற்றமான குரல் எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

கல்வி மன்றம் நோக்கி...

மனைவியை ஒரு மதிரி சமாளித்துவிட்டு, மதிய போசனத்தை முடித்துவிட்டு, பிற்பகல் 3 மணி அளவில் வல்வைக் கல்வி மன்றத்தை அடைந்தேன்.

வல்வைக் கல்விமன்றம்...!

வாசலில் பெரிய பெயர்ப் பலகை உள்ளே வருவோரை அழைப்பது போல் இருந்தது. இது கடந்த பன்னிரண்டு வருடங்களாக வல்வெட்டித்துறையில் சிறந்த கல்வி, கலாசாரப் பணியாற்றி வருவதுடன் பல சமூகப் பணிகளையும் ஆற்றும் நிறுவனம்.

அன்று நிலவிய பதற்றம் காரணமாகப் பெற்றோர் தமது பிள்ளைகளை மன்றத்திற்கு அனுப்பியிருக்க மாட்டார்கள் என்று நினைத்து மன்றத்தின் உள்ளே நுழைந்த எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆம்!... சுமார் 250 மாணவர்கள் வரை அங்கு வழமை போல் உற்சாகமாகவே இருந்தார்கள்! அவர்களது பெற்றோர்களின் உறுதியையும், தன்னம்பிக்கையையும், மனத்துணிவையும் எண்ணி ஆச்சரியப்பட்டேன்.

அங்கே கற்பிக்கின்ற ஆசிரியர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்து விட்டார்கள்!

ஸ்ரீலங்கா துண்டுப் பிரசுர எச்சரிக்கை பெருமளவுக்கு அவர்களை யாரையுமே பாதித்ததாகத் தெரியவில்லை.

எவருமே மனக்குழப்பம் அடையவில்லை என்பதை அவர்களது கலகலப்பான சுபாவம் எடுத்துக்காட்டியது. இன்னும் இரண்டு நாட்கள் அவகாசம் இருப்பதால் பார்த்துப் போகலாம் என்ற யோசனையில், தமக்கு நேரப் போகின்ற துயரங்களையும் மறந்து உற்சாகமாக இருந்தனர்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் மிதிவெடி; குடும்பமாது கால் இழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 12 வீட்டில் மீளக்குடியமர்ந்து இரண்டு மாதங்களின் பின்னர், வீட்டில் புதைந்து கிடந்த மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை இழந்தார் ஒரு குடும்பப் பெண்.

நேற்று ஊர்காவற்றுறை தம்பாட்டியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. குமாரவேல் இராசாம்பாள் (வயது 49) என்ற பெண்ணே காலை இழந்தவராவார்.

ஊர்காவற்றுறையில் இடம் பெற்ற இராணுவநடவடிக்கைகள் காரணமாக தமது வீட்டை விட்டு இடம் பெயர்ந்த இவரது குடும்பம் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் மீண்டும் வீட்டில் மீளக்குடியமர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இந்தப் பெண் வீட்டுத்தாவாரத்தில் விறகு அடுக்கி விட்டுத் திரும்பிய போது முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கினார் என்றும் கூறப்பட்டது.

(உ-15)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு

(மாவட்டப் பொறுப்பதிகாரி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மட்டக்களப்பு)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு 05-02-91 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் அகால மரணமானார்.

இவர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் உருத்திரகுமார் (லண்டன்), பூர்ணிமா, தயாளினி, செந்திற்குமாரி, குகன் ஆகியோரின் அன்புத்தந்தையும் கருணாகரனின் அன்பு மாமனாரும் இணுவில் கிழக்கு தாமோதரம்பிள்ளை அன்னபூரணம் தம்பதிகளின் மகனும், வயிரவப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், ஆறுமுகம், கண்மணி, கணேசமணி விஜய சண்முகம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், சண்முகம்பிள்ளை, மகாலிங்கம், ஜெயமணி, சிவபாதசுந்தரம், செல்வரத்தினம் (செல்வம் பிறதர்ஸ் மன்னார்) இராசேந்திரம், விஜயரட்ணம், மனோரஞ்சிதம், பவளமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனத்தை மயானத்தில் 06-02-91 புதன்கிழமை நடைபெற்றன இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!

செல்வம் பிறதர்ஸ்,
மன்னார்.

(5818)

## திருமதி கந்தையா பொன்னம்மா

வண்ணார்பண்ணை வடமேற்கு ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கந்தையா பொன்னம்மா 10-2-91 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முதலியார் இராஜகோபால் அவர்களின் அருமை மகளும், திருமதி பராசக்தி செல்வரெத்தினம் அவர்களின் அருமைச் சகோதரியும், திருமதி அருந்ததி சண்முகநாதன், டாக்டர் அருள்நெறி, திருமதி அருள்மறைகண்டதேவி சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் T. சண்முகநாதன் (ஓய்வுபெற்ற வைத்தியப் பணிப்பாளர்), சகுந்தலா, திரு. க. சண்முகலிங்கம் (திறைசேரி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 2 - 91 அன்று பிற்பகல் 4 - 30 மணியளவில் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்

செ. இராகவன்

இல. 8, ஐயனார்கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,

(15817)

## திருமதி பாக்கியம் சின்னத்தம்பி

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னத்தம்பி காலமானார்.

இவர் காலஞ்சென்ற க. சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், செல்வி அருணோதயம் (அதிபர், சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பராய்), திருமதி பராசக்தி கார்த்திகேசு (ஆசிரியை, சந்திரோதய வித்தியாசாலை, உரும்பராய்), செல்வி சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சி. கார்த்திகேசுவின் (அதிபர், அ.த.க. பாடசாலை, பனிக்கன்குளம்) அன்பு மாமியாரும், செல்வன் கா. உமாகஜனின் (யாழ் மத்திய கல்லூரி மாணவன்) அன்புப் பேத்தியுமாவர்.

ஈமச்சடங்குகள் இன்று (12 2-91) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை

உரும்பராய்.

[15437]

# கொழும்பு செல்லும் நோயாளர்

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்குச் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களின் விபரங்கள் எதிர் வரும் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் பதிவு செய்யப்படும்.

அத்தினங்களில் காலை 10 மணிக்கு நோயாளியின் பெயர், பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களுடன் சென்று பதிவு செய்யவேண்டும்.

முன்னர் பதிவு செய்தவர்களும் மீண்டும் தமது விபரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-15)

# புலிகளோ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணுவதையே அரசு தனது நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தற்போது போராட்டத்தின் மூலம் பேசுகிறது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் முறையான பிரதிநிதியாக விளங்குவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்திய காலகட்டத்தில் அவர்களுடன் முறையான அர்த்தமுள்ள அரசு பேச்சுக்களை நடத்தாது இழுபறி செய்தது.

அதன் காரணமாகத்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கையோங்கியது.

இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் பலம் பொருந்தியதாக உள்ளது.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

# படையினரிடம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறந்து அல்லது காயமடைந்து இருப்பதாகத் தெரிய வந்தது. காயமடைந்தவர்கள் இடையில் சிக்குண்டிருப்பதால் அவர்களை பாதுகாப்பாக எடுத்துவர முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று சுமார் பத்து மைல்களுக்கு அப்பால் இறம்பைக்குளத்தில் விழுந்து வெடித்ததில் சுப்பிரமணிய சோதி (வயது 33 - வட்டக்கச்சி), காளிமுத்து (வயது 32 - வட்டக்கச்சி) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில்—

கொழும்பு போவதற்காகச் சென்று தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகளில் தரித்து நின்ற நூற்றுக்கணக்கான பயணிகளும் இப்பகுதியில் சிக்குண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு என்ன நடந்தது. என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இவர்கள் பாதுகாப்பாக வவுனியா நகருக்குள் சென்று விட்டனரா அல்லது இடையில் இராணுவத்தினரிடம் சிக்குண்டு தவிக்கின்றனரா என்பதை அறிய முடியவில்லை.

இதற்கிடையில் பரனாட்டான்கல் பகுதியில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி காயமுற்ற கந்தசாமி தவராசா (வயது 41-நாவற்குழி/காரைநகர்) என்பவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளார்.

அவர் தெரிவித்த தகவலின்படி—

இப்பகுதியில் பல நூற்றுக்கணக்கான பயணிகள் படையினரிடம் சிக்கியுள்ளனர். ஐந்து மினிபஸ்கள், சுமார் 15 லொறிகள், இரண்டு டிராக்டர் என்பன படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மினிபஸ் ஒன்று படையினரால் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளது. (உ-15)

# பரந்த..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், பேயாடிக்கூழாங்குளம், ஓலுமடு, பண்டிக்கெய்தகுளம், புதுக்குளம் சாஸ்திரிகூழாங்குளம். ஓமந்தை முதலிய பகுதிகளிலேயே கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஹெலிக்கொப்டர்களும் ஆங்காங்கே கவிபர், ரொக்கட் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி முன்னேற முயலும் படையினருக்கு உதவியாகவே வான் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

நேற்று முன்தினம் காலையில் பம்பைமடுப் பகுதியில் பொம்மர்கள் நடத்திய தாக்குதலில் அரசாங்கத் தமிழ் பாடசாலை முற்றாகச் சேதமடைந்தது. நரசிம்மன் கோயிலும் பலத்த சேதத்திற்கு இலக்கானது.

நெல்லுக்குளம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒரு வீடும் வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருள்களும் முற்றாக நாசமடைந்தன.

சாஸ்திரிகூழாங்குளத்தில் பொம்மர் தாக்குதலுக்கு இலக்காகி காயமுற்ற பெனடிக் ஜிம்சன் ஜோர்ஜ் (வயது 21- கிளிநொச்சி) என்பவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளார். (உ-15)

# வவுனியா பகுதி......

தெரிவித்தன.

நேற்று முன்தினம் காலையில் மாமடு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் கண்டி வீதி வழியாக முன்னேறியபோது பரனாட்டான்கல்லில் வைத்து விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்துத் தாக்கினர்.

காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அப்பகுதியில் கடும் சண்டை நடந்தது.

இராணுவத் தரப்பில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. விடுதலைப்புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீர மரணம் அடைந்தனர்.

இப்பகுதியில் நேற்று முன்தினம் மாலையில் நிலை கொண்டிருந்த இராணுவ அணி நேற்றுக் காலை முன்னேறி நகர்ந்தபோது, புதுக்குளத்திற்கும், நொச்சிமோட்டைக்கும் இடையில் வைத்து அவர்களை வழிமறித்து புலிகள் மீண்டும் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

நேற்று மாலை வரை அங்கு சண்டை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய சேதவிபரங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை.

தாண்டிக்குளத்தில்

இதேசமயம் —

நேற்று முன்தினம் காலை நான்கு மணியளவில் வவுனியா நகரிலிருந்தும் மற்றொரு இராணுவ அணி கவச வாகனங்கள், டிரக்குகள், ஜீப்புக்கள் ஆகியவற்றிலும் நடையாகவும் தாண்டிக்குளம் நோக்கி முன்னேறியது.

அந்த அணியை தாண்டிக்குளத்தில் வைத்து எதிர் கொண்ட விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

காலை முதல் இரவு 7 30 மணிவரை இப்பகுதியில் மோதல்கள் இடைவிடாது இடம்பெற்றன.

தாண்டிக்குளம் பகுதியில் புலிகளின் பொறி வெடியில் சிக்கி ஐந்து இராணுவத்தினர் கால்களை இழந்தனர் என்றும் —

மேலும் பல படையினர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அப்பகுதியில் இடம்பெற்ற கடும் சண்டையை அடுத்து இரவு படையினர் அங்கிருந்து பின்வாங்கி வவுனியா நகருக்குள் திரும்பினர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் மீண்டும் நகரிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் தாண்டிக்குளத்திற்கு வந்த போது மீளவும் சண்டை மூண்டது. காலை 7 மணி முதல் காலை 9 மணி வரை மோதல்கள் இடம்பெற்றன.

காலையில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

இந்த இராணுவ அணி தாண்டிக்குளம் பகுதியிலேயே நேற்றிரவு நிலைகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஈராக்கில்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

அத்தியாவசிய சேவைகளில் உள்ள தடைகள்பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்றது.

அதில் பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களும், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இருவரும் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்கள் மீது தொடுத்துள்ள போரால் [illegible] [illegible] அரச விதித்துள்ள பொருளாதாரத் தடையால் மக்கள் பட்டினியாலும் மருத்துவ வசதியின்மையாலும் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் செஞ்சிலுவைச் சங்கம் இங்கு என்ன செய்கிறது? ஈராக்கில் உள்ள மக்களுக்கு உணவு. மருந்து வழங்குவது போன்று இங்குள்ளவர்களுக்கு ஏன் வழங்க முடியாது? — இவ்வாறு கூட்டத்தில் பல்வேறு கேள்விகள் கிளப்பப்பட்டன.

இந்தக் கேள்விகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் செவிமடுத்தனர். எனினும் அவர்கள் பதில் ஏதும் தரவில்லை. இடைநடுவில் கூட்டத்தை விட்டு எழும்பிச் சென்றுவிட்டனர்.

[உ-3]


**Battery Charger**

பெரிய அளவிலான - வாகனங்களுக்கான - மின்கலங்களுக்குரிய மின்னூட்டி (Battery Charger) தேவை. விற்பனைக்கு அல்லது வாடகைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்புகொள்ளவும்.

உதயன் பணிமனை,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org